.

| | | |
|---|---|---|
| | மாகாணக்கல்வித் திணைக்களம் | |
| | வடக்கு மாகாணம் | |
| | இரண்டாம் தவணைப் பரீட்சை – 2023 | |
| தரம் 11 | சைவசமயம் **I, II** | நேரம் : 3 மணித்தியாலம் |

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால் என கபிலதேவ நாயனார் போற்றும் கடவுள்

   i) சிவன் ii) விநாயகர் iii) சக்தி iv) விஸ்ணு

2. ஆன்மாக்களை மலபந்தத்தில் இருந்து நீக்கி அவற்றுக்கு பேரின்பத்தை கொடுப்பது

   i) படைத்தல் ii) அழித்தல் iii) அருளல் iv) மறைத்தல்

3. "நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுள்ளே புக்கு நிக்கும் பொன்னார் சடைப் புண்ணியன்" எனக்கூறியவர்

   i) அப்பர் ii) சம்பந்தர் iii) சுந்தரர் iv) மாணிக்கவாசகர்

4. சிவபிரான் பன்றிக்குட்டிகளுக்கு பால் கொடுத்த கதை வலியுறுத்தும் விழுமியப் பண்பு

   i) அன்பு ii) கருணை iii) இரக்கம் iv) ஜீவகாருண்யம்

5. தவம், தானம் என்பவற்றை செய்பவர்களைவிட உயர்ந்தவர்களாக வள்ளுவர் கருதுபவர்

   i) உண்மை பேசுபவர்கள் ii) தவம் செய்பவர்கள்

   iii) அறம் செய்பவர்கள் iv) பொய் பேசுபவர்கள்

6. கந்தசஷ்டி விரதகாலத்தில் ஆலயங்களில் பாராயணம் செய்யப்படும் நூல்

   i) பிள்ளையார்கதை ii) கந்தபுராணபடனம்

   iii) கந்தரலங்காரம் iv) கந்தரனுபூதி

7. தீபாவளி காலத்தில் நல்லெண்ணமாகிய எதனை நம் உடம்பில் பூசுதல் வேண்டும்

   i) அரப்பு ii) சந்தனம் iii) எண்ணெய் iv) திருநீறு

8. கிரியைகள், மதஆசாரங்கள் பற்றிக் கூறும் பகுதியாக அமைந்த காண்டம்

   i) ஞான காண்டம் ii) கர்ம காண்டம்

   iii) உபாசன காண்டம் iv) உற்பத்தி காண்டம்

9. சத்தியத்தை மீறியதால் இரண்டு கண்களையும் இழந்த சுந்தரர் இடக்கண் பெற்ற தலம்

   i) திருக்கச்சியேகம்பம் ii) திருவாரூர்

   iii) திருப்புகலூர் iv) திருவெற்றியூர்

10. உற்சவத்தின் ஆரம்பத்தில் வீதியைச் சுத்தம் செய்யும் பாவனையில் நிகழ்த்தப்படும் கிரியை

    i) கிராமசாந்தி ii) தாகசாந்தி iii) வாஸ்துசாந்தி iv) கிரகசாந்தி

11. “மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல் எனக் கூறியவர்

i) மாணிக்கவாசகர் ii) விபுலானந்தர்

iii) சேக்கிழார் iv) கபிலர்

12. புரட்டாதி மாதத்தில் வரும் பூரநட்சத்திரத்தில் இறைவன் திருவடியை சேர்ந்தவர்

i) அருணந்தி சிவாசாரியார் ii) மெய்கண்டதேவர்

iii) சிவஞானசித்தியார் iv) உமாபதி சிவாச்சாரியர்

13. “பிரமன் தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி என அப்பர் பெருமான் போற்றித் துதிக்கும் தெய்வம்

i) பிள்ளையார் ii) முருகன் iii) முனியப்பர் iv) வைரவர்

14. காரியம் வெற்றி பெறுவதற்கு இறையருள் வேண்டி வெற்றிலைச் சடங்கு நிகழ்த்தப்படும் ஆலயம்

i) களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் ii) கொக்கட்டிச்சோலை

iii) நல்லூர் கந்தசுவாமி கோயில் iv) நயினாதீவு நாபூசணி அம்மன்

15. எழுநூற்று நாற்பத்து நான்கு அடிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட நூல்

i) சிவராத்திரி புராணம் ii) ஏகாதசிப் புராணம்

iii) பிள்ளையார் கதை iv) கந்தபுராணம்

16. நாவலரின் கல்வி தொடர்பான சிந்தனையை தேசிய அளவில் நடைமுறைப்படுத்திய நிறுவனம்

i) சைவவித்தியா விருத்திச்சங்கம் ii) சைவபரிபாலன சபை

iii) சைவப்பிரகாசா வித்தியாசாலை iv) சமய நிறுவனம்

17. உயிர்களின் ஈடேற்றம் கருதி இறைவனால் அருளப்பட்டவை

i) தனு,கரண,புவன,போகம் ii) சரியை,கிரியை,யோகம்,ஞானம்

iii) அறம்,பொருள்,இன்பம்,வீடு iv) மெய்,வாய்,கண்,மூக்கு

18. தவம் செய்பவர்களிடம் காணப்படும் பெரும் ஆற்றல்

i) மனதை ஒருநிலைப்படுத்தல் ii) பசியைப் பொறுத்தல்

iii) தவம் செய்தல் iv) உணவை விரும்பல்

19. செல்வம் அழியாதபடி மாத்திரமல்ல புண்ணியமாக பெருகும்படியும் சேமிப்பவன்

i) அறிவாளி ii) ஒப்புரவாளன் iii) வள்ளல் iv) கொடையாளி

20. சூரியன் ஒரு இராசியில் பிரவேசிப்பது முதல் இந்த இராசியை விட்டு விலகுவது வரையான காலப்பகுதி

i) யோகம் ii) மாதம் iii) திதி iv) வாரம்

21. திருக்கோயில்களுக்கான நிலத்தை தேர்ந்தெடுக்கும் நிகழ்வு

i) பூகர்ஷணம் ii) பிரதிஷ்டை iii) கிரியை iv) பெருஞ்சாந்தி

22. நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தில் உள்ள திருமாலைப் பாசுரங்களைப் பாடியவர்

i) பேயாழ்வார் ii) பொய்கையயாழ்வார்

iii) தொண்டரடிப்பொடியாழ்வார் iv) நம்மாழ்வார்

23. வேத ஆகம உண்மைகளை எளிய முறையில் சாதாரண மக்கள் விளங்கும் வகையில் கூறுவன

i) வேதங்கள் ii) ஆகமங்கள் iii) உபநிடதங்கள் iv) புராணங்கள்

24. குங்கிலிய தூபம் இடுவது தனது பிறவிப்பயனும் கடனும் எனக் கருதிச் செயற்பட்டவர்

i) கலயர் ii) மாறனார் iii) அப்பர் iv) சுந்தரர்

25. திருப்பெண்ணாகாடத்தில் பிறந்து சிதம்பரத்தில் வாழ்ந்த சந்தானகுரவர் யார்?

i) உமாபதி சிவாச்சாரியார் ii) மறைஞானசம்பந்தர்

iii) அருணந்தி சிவாசாரியார் iv) மெய்கண்டதேவர்

26. நிலையான முத்தியின்பத்திற்கு வழியேற்படுத்தும் வினையாக அடைவது

i) பிரார்த்தவினை ii) சஞ்சிதவினை

iii) பற்றற்றவினை iv) ஆகாமியவினை

27. சர்வ வியாபகமான திருவருளை அறியாமை பெருங்குற்றம் எனக்கூறும் நூல்

i) திருமந்திரம் ii) திருக்குறள்

iii) புறநானூறு iv) திருவருட்பயன்

28. ஆடிமாத சுவாதி நட்சத்திரத்தில் முத்தியடைந்த அருளாளர்

i) சம்பந்தர் ii) அப்பர்

iii) சுந்தரர் iv) மாணிக்கவாசகர்

29. எல்லா உயிர்களும் குறைவின்றி வாழ்தற் பொருட்டு நிகழ்த்தப்படும் கிரியையாதலால் குடமுழுக்கானது

i) பெருஞ்சாந்தி ii) திருக்குடமுழுக்கு

iii) பிரதிஷ்டை iv) கும்பாபிஷேகம்

30. தேவர்களும், சயந்தன் முதலியோரும் சூரபத்மனால் சிறைவைக்கப்பட்டிருந்த நகரம்

i) மதுரை ii) சிதம்பரம் iii) மகேந்திரபுரி iv) திருவாரூர்

31. சிங்கைப் பரராஜசேகரனால் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்கு எல்லையாக வடக்குத் திசையில் அமைக்கப்பட்ட ஆலயம்

i) வெயிலுகந்த விநாயகர் கோவில் ii) சட்டநாதர்கோவில்

iii) வீரமாகாளி அம்மன்கோவில் iv) கைலாசநாதர் கோயில்

32. கொல்லி மழவன் என்ற சிற்றரசனது பிள்ளையை பீடித்த முயலகன் என்னும் நோயை நீக்குவதற்கு சம்பந்தர் பாடிய பதிகம்

i) இடரினும் தளரினும் ii) அவ்வினைக்கிவ்வினை

iii) துணிவளர் திங்கள் iv) மட்டிட்டபுன்னை

33. சிவசின்னங்களில் ஒன்றான பஞ்சாட்சரத்தின் சூக்கும நாமமாக கொள்ளப்படுவது

i) நமசிவாய ii) சிவாயநம iii) சிவாயசிவா iv) சிவசிவாய

34. கடவுளுக்கும் மெய்யடியார்களுக்கும் செய்யும் வழிபாடுகளும் தொண்டுகளும்

i) பதிநல்வினை ii) பதித்தீவினை iii) பசுநல்வினை iv) பசுத்தீவினை

35. சைவத்தின் உண்மையை நிலைநிறுத்துவதற்காக ஆறுமுகநவலர் வண்ணார் பண்ணையில் முதற் பிரசங்கம் நிகழ்த்திய ஆண்டு

i) 1990 ii) 1843 iii) 1848 iv) 1847

36. ஆலயத்தின் உறுப்புக்களிலோ, விக்கிரங்களிலோ சேதம் ஏற்படுமிடத்து பாலஸ்தாபனம் செய்து புனரமைப்பது

i) அநாவர்த்தனம் ii) ஆவர்த்தனம் iii) புனராவர்த்தனம் iv) அந்தரிதம்

37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு அட்டவணையைப் பயன்படுத்தி விடைதருக

| | | |
|---|---|---|
| A – ஆறுமுகம் | E – கச்சியப்பர் | I – பன்னிரண்டு வருடம் |
| B – கும்பாபிசேகம் | F – வித்தியாபாலன யந்திரசாலை | J – 63 நாயன்மார்களின் வரலாறு |
| C – கந்தபுராணம் | G – சேக்கிழார் | K – கார்த்திகை மாதம் |
| D – பெரியபுராணம் | H – மண்டலாபிஷேகம் | L – சூரபன்மன் |

37. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவருடன் தொடர்புடைய எழுத்துக்கள் அடங்கிய தொகுதி

i) AFK ii) AEK iii) BGL iv) BGI

38. ஆலயம் ஒன்றைப் புதிதாக அமைத்து செய்யப்படும் கிரியைகளுடன் தொடர்புடைய தொகுதி

i) BGL ii) BHI iii) CHI iv) CEI

39. சைவசிந்தாந்த உண்மைகளை கதை வடிவில் கூறும் தமிழ்ப்புராணத்துடன் தொடர்புடைய கூட்டம்

i) DEJ ii) DGK iii) CEL iv) CEK

40. தொண்டர்களின் பெருமைகளைக் கூறும் நூலுடன் தொடர்புடைய எழுத்துக்கள்

i) CGL ii) CEL iii) DEJ iv) DGJ

## பகுதி – II

**முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

1. i) பரம் என்ற சொல்லின் பொருள் யாது?
   ii) நாகர்கள் எவ்விடங்களில் கற்றளிகள் அமைத்தனர்?
   iii) உமாபதி சிவாச்சாரியார் ஆற்றிய அற்புதங்கள் இரண்டு தருக?
   iv) அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சராய் இருந்தவர் யார்?
   v) அருணகிரிநாதர் அருளிய நூல்கள் இரண்டு தருக?
   vi) சுந்தரரின் குருபூசை அனுட்டிக்கப்படும் தினம் யாது?
   vii) சைவசித்தாந்தம் கூறும் பாசங்கள் எவை?
   viii) வேதங்களில் கூறப்படும் மூன்று காண்டங்களும் எவை?
   ix) தீபாவளிப்பண்டிகை உணர்த்தும் தத்துவம் யாது?
   x) வீட்டில் இறைசிந்தனை வளர்க்கும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

(2x10 = 20)

2. கீழ்வரும் பதிகங்களில் இரண்டினை அடிமுறை பிழையறாது எழுதுக. அவற்றின் பொழிப்பினை எழுதுக.
   i) குனித்த புருவமும்……………
   ii) நாமார்க்கும் குடியியல்லோம்………………..
   iii) ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை…………….
   iv) தூக்கும் பனுவல் துறை…………………
   v) மூவிரு முகங்கள் போற்றி………………..

(3+2 = 5x2=10)

3. "சைவசமய நூல்கள் உயர்ந்த விழுமியங்களை வலியுறுத்துகின்றன"
   i) வாய்மை என்பதற்கு திருவள்ளுவர் தரும் விளக்கம் யாது?
   ii) சைவ விழுமியங்களை கடைப்பிடிப்பதனால் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக?
   iii) ஈகை, ஒப்புரவு இரண்டிற்குமிடையிலான வேறுபாடு யாது?

(2+3 +5=10)

4. “பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்ட பின்னர் பாடப்பட்டவை பிற்காலத் தோத்திரப் பாடல்களாகும்.”

   i) பிற்காலத் தோத்திரப் பாடல்கள் இரண்டைக் குறிப்பிடுக?

   ii) திருவரங்கப் பெருமாளின் அழகை தொண்டரடிப்பொடியாழ்வார் எவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்?

   iii) அம்பிகையின் கடைக்கண் பார்வை அடியார்க்கு எவற்றை நல்கும்?

(2+3 +5=10)

5. “கோபுர தரிசனம் கோடி புண்ணியம்”

   i) களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம், கிராமம் என்பவற்றைத் தருக?

   ii) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் பரிபாலகர், பூசை செய்பவர், தேர்த்திருவிழா என்பன எவ்வாறு அழைக்கப்படும்?

   iii) புன்னைச்சோலை பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இடம்பெறும் சடங்குகள் 5 தருக?

(2+3 +5=10)

6. கண்டனன் தொழு மைந்தனைப் புல்லினன்
   களிப்பு உள்ளம் கொண்டனன் புறம் தீவினை
   பல் உகம் கொடியோர் செய்
   ஒண்தனைப் புகுந்து எயதனன் போலும்…………….

   i) கந்தபுராணத்தை இயற்றியவர் யார்? அது எத்தனை காண்டங்களை உடையது?

   ii) கந்தபுராணத்தில் அடங்கும் காண்டங்கள் எவை?

   iii) இப்பாடலின் பொருளை உமது மொழிநடையிற் தருக?

(2+3 +5=10)

7. பின்வரும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

   i) சைவ விழுமியங்கள்

   ii) மெய்கண்ட தேவர்

   iii) வேதங்கள்

   iv) நாட்டார் வழிபாடு